[திரு. மு.க ஸ்டாலின்] [2010 மே 14

சொன்னதுபோல, எந்த மாவட்டத்திற்கு அப்படி அவசியம் ஏற்படுகிறதோ, அந்த நேரத்தில் நிச்சயமாக அரசு அதற்குரிய நிதியை ஒதுக்கி, அந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஈ) சென்னை, தீ விபத்தால் பாதிக்கப்பட்டோருக்கு கான்கிரீட் வீடுகளும், சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அடுக்குமாடி வீடுகளும் கட்டித் தருதல் மற்றும் கலைஞர் வீட்டு வசதித் திட்டத்தைப் பேரூராட்சிப் பகுதிகளுக்கும் விஸ்தரித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி. ஜெயக்குமார், வேறு பிரச்சினையாக இருந்தால் மட்டும் நீங்கள் பேசலாம். (குறுக்கீடு) சரி சொல்லுங்கள்.

திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் பிற்பகல் 2-30 மணியளவில் சென்னை, திருவான்மியூர் மீனவர் குப்பத்தில் ஏற்பட்ட கடுமையான தீ விபத்தின் காரணமாக, சுமார் 350-க்கும் மேற்பட்ட குடிசைகள் எரிந்து, தரைமட்டமாகி சாம்பலாகியிருக்கின்றன. பல பேர் காயமுற்றிருக்கின்ற நிலையில், குடிசைகள் தீப்பிடித்து எரிகின்ற சூழ்நிலை ஒரு புறம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் மாவட்டங்களில் ஒரு சர்வே எடுக்கப்பட்டு, எவ்வளவு குடிசைகள் இருக்கின்றன என்பதை அறிந்து, அவற்றை கான்கிரீட் வீடுகளாகக் கட்டித் தருவோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், அந்தத் திட்டத்தில் சென்னை சேர்க்கப்படவில்லை. எனவே, சென்னையில் அந்தத் திட்டம் சேர்க்கப்படுகின்ற நிலை உள்ளதா? ஏற்கெனவே குடிசை மாற்று வாரியம் ஒன்று உள்ளது. குடிசைப் பகுதிகளை அகற்றி, அந்தக் குடிசைப் பகுதிகளில் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக அடுக்கு மாடிக் குடியிருப்புகள் கட்டுகின்ற திட்டம். ஏற்கெனவே அடுக்கு மாடிக் குடியிருப்புகள் கட்டப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டவர்களுக்கு, அந்த அடுக்கு மாடிக் குடியிருப்புகளைப் பெற்றவர்களுக்கு இலவசமாக, கட்டணம், வாடகை எதுவும் வசூல் செய்யாமல், அவர்களுக்கே சொந்தமாக்குவதுதான் இந்த concept-ன் சரியான தீர்வாகும். எனவே, ஒரு பக்கம் கிராமங்களிலே இலவச வீடுகளைக் கட்டிக் கொடுத்துவிட்டு, சென்னையில் இருக்கின்ற குடிசை மாற்று வாரியத்தின்மூலம் கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளில் குடியிருப்பவர்களிடம் வாடகை வசூல்

2010 மே 14] [திரு. டி. ஜெயக்குமார்]

செய்தால், அது எந்தவிதத்தில் நியாயம் என்பதை நான் கேட்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். எனவே, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின்மூலம் கட்டப்பட்ட வீடுகள் அனைத்தையும் இலவசமாக்க வேண்டும், இது ஒன்று. இரண்டாவது, இப்போது பாதிக்கப்பட்டிருக்கின்ற மீனவ மக்களுக்குக் குடியிருப்புகள், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின்மூலம் இலவசமாகக் கட்டித் தரப்பட வேண்டும். ஏற்கெனவே, திருவான்மியூர், ஊரூர் குப்பம், ஓடைமாநகர் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பிரச்சினையை மட்டும் சொல்லுங்கள், (குறுக்கீடு) மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவன ஈர்ப்புத் தீர்மானம் என்றால், ஒரு பிரச்சினையை மட்டும்தான் எழுப்பலாம். அந்தப் பிரச்சினையில் என்ன முடிவெடுக்க வேண்டும் என்று, அதற்கு என்ன காரணங்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருதுவதையெல்லாம் இதில் பேசுவது என்பதற்கு இது ஒன்றும் மானியக் கோரிக்கை அல்ல. கவன ஈர்ப்பு என்பது, எரிந்து போன குடிசைகளுக்கு மாற்று என்ன என்று கேட்கலாம். அல்லது வீடுகள் கட்டித் தருகின்ற திட்டம் என்ன என்று கேட்கலாம். அதுகூட, இப்படிப்பட்ட கவன ஈர்ப்பு மூலமாகக் கேட்டுத் தீர வேண்டிய அவசியம் உள்ளதா என்று எண்ண வேண்டியுள்ளது. அவைத் தலைவர் அவர்கள் அனுமதித்த காரணத்தால் நீங்கள் பேசுகிறீர்கள். அது கவன ஈர்ப்புத் தீர்மானமாக மட்டும்தான் இருக்க வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. டி. ஜெயக்குமார், 350 குடிசைகள் எரிந்தது குறித்து இந்த அவையினுடைய கவனத்தை ஈர்க்கிறேன் என்று மட்டும் சொல்லிவிட்டு, உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் முடிக்கமாட்டேன் என்கிறீர்களே?*

திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸுக்கு ஒரு நீதி, ஜெயக்குமாருக்கு ஒரு நீதியா? நான் கேட்பது, அந்த இடத்தில் உள்ளவர்களுக்கு நிவாரணம் கொடுக்க வேண்டும் என்பது ஒன்று. அடுக்கு மாடி வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டும். சுனாமியால் பாதிக்கப்பட்ட ஊரூர் குப்பம், எல்காட் குப்பம், ஓடைமாநகர் உள்ளிட்ட 6 குப்பங்களில் அடுக்கு மாடி வீடுகளே கட்டித் தரப்படவில்லை. அடுக்கு மாடி வீடுகள் கட்டித் தரப்பட வேண்டும். இதுதான் எங்களுடைய வேண்டுகோள்.*

[2010 மே 14

முற்பகல் 9-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்பொருள் குறித்து திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, திரு. ஞா. செந்தமிழன், திரு. எல். ரவிச்சந்திரன் ஆகியோர் அஇஅதிமுக. சார்பாகவும், பாட்டாளி மக்கள் கட்சி சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகனும் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார் அவர்கள், இங்கு கலைஞர் வீட்டு வசதித் திட்டத்தின் மூலமாக ஊரகப் பகுதிகளில் கட்டக்கூடிய திட்டம்போல், நகரப் பகுதிகளிலும் உருவாக்க வேண்டும். குறிப்பாக, மீனவர் பகுதிகளிலும் உருவாக்கித் தர வேண்டுமென்று ஒரு கோரிக்கையை எடுத்து வைத்திருக்கின்றார்கள். இந்தத் திட்டத்திற்குப் பெயர் கலைஞர் வீட்டு வசதித் திட்டம். ஆனால், என்ன காரணத்தினாலோ, அந்தப் பெயரைச் சொல்லாமல், வெறும் வீட்டு வசதித் திட்டம் என்று சூசகமாகச் சொன்னார். ஏதாவது அவருக்கு விபத்துகளோ, விபரீதங்களோ ஏதோ வந்துவிடுமோ என்ற ஓர் அச்சத்தின் காரணமாக, அந்தப் பெயரைத் தவிர்த்து (மேசையைத் தட்டும் ஒலி) அவர் வெறும் வீட்டு வசதித் திட்டம் என்று சொல்லியிருக்கிறார். கலைஞர் வீட்டு வசதித் திட்டம்தான். அதைத்தான் அவர் குறிப்பிட்டிருப்பார் என்று நான் கருதுகிறேன்.

இந்தத் திட்டம் ஊரகப் பகுதிகளில், ஊராட்சிப் பகுதிகளில் உருவாக்கக்கூடிய வகையிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது. நகரப் பகுதிகளைப் பொறுத்தவரையிலே, பேரூராட்சிப் பகுதிகளைப் பொறுத்தவரையிலே, மாநகரப் பகுதிகளைப் பொறுத்தவரையிலே, ஏற்கெனவே, குடிசை மாற்று வாரியத்தின், அந்தத் திட்டத்தின் மூலமாக வீடுகள் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதுமட்டுமல்ல, மத்திய அரசின் நிதியுதவியோடு செயல்படுத்தப்படக்கூடிய, ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம். அந்தத் திட்டத்தின் மூலமாகவும், கான்கிரீட் வீடுகள் ஆங்காங்கே கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. எனவே, உறுப்பினர் சொன்ன அந்தக் கோரிக்கையும், அதிலே சேர்ப்பதற்கான முயற்சியையும் மேற்கொள்வதற்கு நிச்சயமாக அரசு துணை நிற்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.